# நோய்த் தொற்றினை தடுக்கவேண்டும்! - தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்... முதல் பக்கத் தொடர்ச்சி

❖வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையங்களை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மூலம் பொது மக்கள் தொடர்பு கொள்ளலாம்.

❖பேரிடர் குறித்த எச்சரிக்கை தகவல்கள் கடலோர பகுதிகளில் 424 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை கருவிகள், TNSMART செயலி, பொதுவான எச்சரிக்கை நடைமுறை, அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு உரிய காலத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்படும் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், நிவாரண மையங்களும் கண்டறியப்பட்டு, தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**உபரிநீர் வெளியேற்றல்!**

❖நிவாரண முகாம்களில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உள்ளதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

❖பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றும் போது முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பேரிடர் காலங்களில், பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாருவதோடு, கரைகளையும் வலுப்படுத்த வேண்டும். அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படும் போது பொதுமக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை வழங்கப்பட வேண்டும்.

❖மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம். பள்ளிகளில் மாணவர்களது பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும். பேரிடர் காலங்களில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**நோய் தொற்றினை தடுக்கவேண்டும்!**

❖பருவமழைக் காலத்தில், நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்கவும், நோய்த் தொற்று பரவலைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதோடு, நோயுற்ற மக்களுக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு, உயிர்காக்கும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், பாம்பு கடிக்கான மாற்று மருந்துகள், ஆக்ஸிஜன் சிலிண்டர்களைப் போதுமான அளவு இருப்பு வைக்க வேண்டும்

❖மாவட்ட ஆட்சியர்கள், கன மழை, புயல், வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை பல்துறை மண்டல குழுக்கள் அமைத்து தொடர்ந்து கண்காணித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திடுக!**

❖சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும், மழைநீர் வடிகால் பணிகளையும், மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும்.

சென்னை, புறநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாலைகள் நிலை மிகவும் மோசமாக உள்ளது என்று எனக்கு தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அதேபோல் பல்வேறு மாவட்டங்களிலும், சாலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாவதோடு, சிறு விபத்துக்கள் ஏற்படும் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இது ஏற்புடையதல்ல.

மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள், மின்வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகள் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும். இதனை வெறும் அறிவுரையாக மட்டும் நான் கூறவில்லை. அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நானும் இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இந்த வாரத்தில் சென்னையில் ஆய்வு நடத்தவுள்ளேன்.

இனி சுற்றுப்பயணம் செய்ய அனைத்து மாவட்டங்களிலும், இது தொடர்பாக நேரடியாக நான் ஆய்வு செய்ய முடிவு செய்திருக்கிறேன். சாலைப்பணிகள் மேற்கொள்ளும் துறைகள் அனைத்தும் துரிதமாக, தரமாக பணிகளை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்பதை கண்டிப்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும்!**

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்வதோடு, உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களை தயார் நிலையில் வைத்திருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக வடகிழக்குப் பருவமழையின் போது, பெய்த கன மழையின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை கருத்தில் கொண்டு, பேரிடர்களின் போது மனித உயிரிழப்புகள் ஏற்படுவதையும், பொதுச் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதையும் தடுக்க அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

> **மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள், மின்வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகள் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும். இதனை வெறும் அறிவுரையாக மட்டும் நான் கூறவில்லை. அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நானும் இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இந்த வாரத்தில் சென்னையில் ஆய்வு நடத்தவுள்ளேன்.**

❖ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, புயல், கனமழை மற்றும் காற்றின் வேகம் தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்களைத் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் உடனுக்குடன் அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

❖பருவமழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக மாவட்டந்தோறும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஒத்திகைப் பயிற்சிகள் நடத்துவதோடு, பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும், குறைத்திடவும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையுடன் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி புதுடெல்லியில் நேற்று (19.09.2023) ஒன்றிய அரசின் ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு சந்தித்து தமிழ்நாட்டுக்கு சேரவேண்டிய காவிரி நீரை கர்நாடகம் உடனடியாக வழங்கிட ஒன்றிய அரசு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினர். இந்நிகழ்வின் போது நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எஸ்.எஸ். பழனி மாணிக்கம், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி எஸ்.ஜோதிமணி (இ.தே.கா), முனைவர் மு.தம்பிதுரை மற்றும் என்.சந்திரசேகரன் (அ.இ.அ.தி.மு.க.), கே.சுப்பராயன் (சி.பி.ஐ.), பி.ஆர். நடராசன் (சி.பி.எம்.), வைகோ (ம.தி.மு.க.), முனைவர் தொல். திருமாவளவன் (வி.சி.க.), டாக்டர் அன்புமணி ராமதாஸ் (பா.ம.க.), ஜி.கே.வாசன் (த.மா.கா.), கே.நவாஸ் கனி (இ.யூ.மு.லீ.), ஏ.கே.பி. சின்னராஜ் (கொ.ம.தே.க.) மற்றும் தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமை செயலர் சந்தீப் சக்சேனா ஆகியோர் உடன் இருந்தனர்.

## அமைச்சர் துரைமுருகன் தலைமையிலான எம்.பி.க்கள் குழு வலியுறுத்தல்... முதல் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று (19.09.2023) காலை ஒன்றிய நீர் வளத் துறை அமைச்சர் . ஷெகாவத்தை தமிழ்நாட்டின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையிலான எம்.பி.க்கள் குழு சந்தித்து காவிரியில் தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை வைத்தனர்.

**அமைச்சர் துரைமுருகன் பேட்டி**

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

“காவிரி விவகாரத்தில் தமிழகத்துக்கு உரிய நீரை திறந்து விடும்படி ஒன்றிய அரசு கர்நாடகாவுக்கு வலியுறுத்த வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்திடம் நாங்கள் வலியுறுத்தினோம். கர்நாடக அரசுக்கு தண்ணீர் இருந்தும் திறந்துவிட மனமில்லை.

அப்படியிருக்க, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி ஒழுங்காற்றுக் குழு அமைக்கப்பட்டது. இவை பிறப்பிக்கும் உத்தரவுகள் சரியாக நடைமுறைப்படுத்தப் படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. எனவே, ஒன்றிய அரசு கர்நாடகத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

5000 கன அடி தண்ணீர் திறந்துவிட காவிரி மேலாண்மை வாரியம் வலியுறுத்தியுள்ளது. ஆனால் அந்த உத்தரவுகளை கர்நாடக அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்று எடுத்துக் கூறினோம்”.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேட்டி அளித்தார்.

இந்நிகழ்வின் போது நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எஸ்.எஸ். பழனி மாணிக்கம், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி எஸ்.ஜோதிமணி (இ.தே.கா), முனைவர் மு.தம்பிதுரை மற்றும் என்.சந்திரசேகரன் (அ.இ.அ.தி.மு.க.), கே.சுப்பராயன் (சி.பி.ஐ.), பி.ஆர்.நடராசன் (சி.பி.எம்.), வைகோ (ம.தி.மு.க.), முனைவர் தொல். திருமாவளவன் (வி.சி.க.), டாக்டர் அன்புமணி ராமதாஸ் (பா.ம.க.), ஜி.கே.வாசன் (த.மா.கா.), கே.நவாஸ் கனி (இ.யூ.மு.லீ.), ஏ.கே.பி. சின்னராஜ் (கொ.ம.தே.க.) மற்றும் தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமை செயலர் சந்தீப் சக்சேனா ஆகியோர் உடன் இருந்தனர்.

செஞ்சியில் 1502 பேருக்கு

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி அட்டை!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி, செப். 20 -

கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக வெளியிடப்பட்ட தி.மு.க. தேர்தல் அறிக்கையில்தமிழ்நாட்டில் உள்ள தகுதி வாய்ந்த குடும்ப தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் ரூ 1000 வழங்க மகளிர் உரிமை திட்டத்திற்கு ரூபாய் 7000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம் அண்ணா பிறந்தநாள் செப்டம்பர் 15ஆம் தேதி இன்று தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அண்ணா பிறந்த நாளான இன்று காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை முறைப்படி தொடங்கி வைத்தார். இதையடுத்து செஞ்சி தொகுதி சார்பில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் தொடக்க விழா செஞ்சியில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திண்டி வனம் சார் ஆட்சியர் கட்டாரவி தேஜா தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதார் ரவிக்குமார், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள்நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1500 மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைபெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முழுவதும் ஏழை குடும்பங்கள் பயன் பெறும் வகையில் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைத்துள்ளார்கள். ஒரே நேரத்தில் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒரே கையெழுத்தினால் பலன் சென்று சேரும் வகையில் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பெண்கள்வாழ்வாதாரம் உயர்வதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கு புதுமைப்பெண் திட்டம்,காலை உணவு திட்டம் மக்களை தேடி மருத்துவம் இல்லம் தேடிக் கல்வி போன்ற என்னற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் முதலமைச்சர்உலகத்திலேயே சிறந்த திட்டமாக பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக ஒரு திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைத்ததை பெண்கள்வரவேற்று மகிழ்ச்சியுடன் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், அண்ணாதுரை,விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி சாந்தி சுப்பிரமணியன்,துரை இளம்வழுதி மணிமாறன் ஒன்றிய துணை சேர்மன்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ் சேரிகணேசன், செஞ்சி பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி,மேல்மலையனூர் வட்டாட்சியர் முகமது அலி,செயல் அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.செஞ்சி வட்டாட்சியர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 21ஆம் தேதி மதுரை கல்லூரியில் நடைபெறும் பொற்கிழி வழங்கும் விழாவில் பங்குபெறும் மாநில இளைஞரணி செயலாளர்–விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பாக வரவேற்பது மற்றும் நிகழ்ச்சியில் திரளானோர் பங்கு பெறுவது சம்பந்தமான பகுதி செயலாளர், வட்ட செயலாளர் ஆலோசனை கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் பெ.குழந்தைவேலு, தனச்செல்வம், ஒச்சு பாலு, மூவேந்திரன், முருகவேல் இளைஞரணி சௌந்தரராஜன் மற்றும் திரளான பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.